மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

(இ.ஏ.எண்.37/2021 இன் இ.பி.எண்.9 /2019 இன் ஒ.எண்.126/2012).

மனுதாரர் தரப்பு சாட்சி வாக்குமூலம் ம.சா.1.

---

பெயர். – திரு.இராஜேந்திரன்
த/பெ. –
கிராமம் –
தொழில் –
தாலுகா –
வயது –

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2024–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20–ஆம் நாள் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.–

1) நான் இந்த மனுவில் மனுதார் எனது மனைவி ஆவார். அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை மனுதார் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | தகதாமனுதார் பெயருக்குள்ள பதிவுக்கிரைய ஆவணம் (எனது மனைவியின் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின்) எஸ்.ஆர்.ஓ.நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | தகதாமனுதார் செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் எண்ணம் 23 ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1 முதல்6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை –

மனுதாரர் ரெஜினா எனது மனைவி என்றால் சரிதான். எனது மனைவி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்காததற்கு யாதொரு சிறப்பு காரணம் உண்டா என்றால் காதுகேட்காது. எனது மனைவி எனக்கு சாட்சியம் அளிக்க அதிகாரம் கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் எழுதி கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் மொத்தம் எத்தனை ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. பத்திரம், வில்லங்க சான்று, உயில், பாகம் பிரித்த ஆவணம் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் கிரையப்பத்திரம்,வீட்டுவரி ரசீது, குடிநீர்கட்டண ரசீது, ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லுவது போல்

பொதுஅதிகார ஆவணமோ, உயிலோ,பாகப்பிரிவினை ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் நான் மனதில் வைத்துக்கொள்ளவில்லை. சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் ஜோதி சங்கரன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். ஜோதி சங்கரன் வழக்கில் 11 வது எதிர்மனுதாரராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற போது ஆவணங்களை சரிபார்த்து தான் வாங்கினேன் என்றால் சரிதான். ஜோதிசங்கரன் அவரது மனைவிக்கு பவர் ஏற்படுத்திக்கொடுத்திருந்தார் அதன் மூலமாக கிரையம் பெற்றேன். ஜோதிசங்கரன் கிரைய ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஜோதிசங்கரனுக்கு முந்திய ஆவணத்தை பார்த்துள்ளேனாஎன்றால் ஜோதிசங்கர் தந்தை எழுதிய உயில் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த உயிலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நகல் எடுத்துப் பார்த்தேனா என்றால் இல்லை. இந்த மனுவில் சுவாதீனம் எடுக்க வரும் போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு விவரங்களை எனது வழக்கறிஞரிடம் விவரத்தை கேட்டு தெரிந்து தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம்எதிர்மனுதாரர் அண்ணாமலை திரவியம் அம்மாள் என்ற இராஜமல்லிகா ஏற்கனவே சார்புநீதிமன்றம் தூத்துக்குடி வழக்கு எண்.62/1987 ல் வழக்குதாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் அண்ணாமலை திரவியம் அம்மாள் என்ற இராஜமல்லிகா அம்மா தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் தெரியாது. அதன்பின்னர் 1ம்எதிர்மனுதாரர் 7 முதல் உள்ள எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தூத்துக்குடி அமர்வு நீதிமன்றத்தில் ஏ.எஸ்.14/1992 ஆக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அந்த வழக்கில் 1ம்எதிர்மனுதாரருக்கு பாதி பங்கு கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. அந்த தீர்ப்புக்கு எதிராக 7 முதல் உள்ள எதிர்மனுதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2 வது மேல்முறையீடு எஸ்.ஏ.எண்.69/1995 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம்தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் 13.08.2011 ல் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம்தெரியுமா என்றால் தெரியாது. அந்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டதா என்றால்

தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது. அந்த தீர்ப்புக்கு பின்னர் தான் மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. அதன்பின்னர் தான் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் 2014 ஆம்ஆண்டு தாவா இடத்தைபார்வையிட்டுஅறிக்கை தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. அந்த அறிக்கையின் அடிப்படையில் வழக்குசொத்தின் வடபுறம் உள்ள சொத்தினை 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் தெரியாது. துாத்துக்குடி நீதிமன்றத்தில் பகுதி பங்கு 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு உண்டு என்று சொன்ன பின்னர் நான் பெற்ற கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. துாத்துக்குடி அமர்வு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து 7 முதல் உள்ள எதிர்மனுதாரர்கள் 2 வது மேல்முறையீடு தாக்கல் செய்துள்ள நிலையில் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு 11 வது எதிர்மனுதாரர் எனக்கு கிரையம் கொடுத்துள்ளது சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. ஆகையால் நான் மனுவில் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
20.02.2024.